இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்

# இயேசுவை தினம் பார்க்கிறேன்

VOL 23 ISSUE 01 JANUARY-2023 | ஆண்டு சந்தா 100/- தனிப்பிரிதி 10/-



## இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் 2023

# நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள்

இயேசுவை தினம் பார்க்கிறேன் மாதப் பத்திரிகை இப்பொழுது Digital முறையில் நம்முடைய இணையதளத்திலும்
WWW.JESUSLIVES.IN

உங்கள் அனைவருக்கும்
இயேசு வாழ்கிறார் ஊழியத்தின் சார்பாக

# 2023

*Happy New Year !*

# இனிய புத்தாண்டு
# நல்வாழ்த்துக்கள்



# ஆசிரியர் உரை

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த புதிய வருஷத்திற்குள் கடந்து போகிற உங்களைத் தேவன் அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக. பலுகுங்கள், பெருகுங்கள், வளருங்கள் என்ற தேவன், இந்த 2023-ஆம் ஆண்டிலே நீங்கள் சகலவற்றிலும் பலுகவும், பெருகவும், முன்னேறவும், அவருக்கு மகிமையாக வாழவும், ஜெபத்தோடு கூட இந்த வருஷத்தைத் தொடங்குங்கள் ஆண்டவராகிய தேவன் உங்களை வழிநடத்துவார். என் சித்தத்தின்படியல்ல உம் சித்தத்தின்படியே ஆகட்டும், நடக்கட்டும் என்று சொன்ன ஆண்டவராகிய தேவன், இந்த வருஷத்தில் அவருடைய பாதையில் நடத்தவும், அவருடைய வேலையைச் செய்யவும், எங்களைப் பயன்படுத்தவும், கர்த்தருடைய காரியங்களை மாத்திரமே நாங்கள் செய்யவும், எனக்காகவும், குடும்பத்திற்காகவும், இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்காகவும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். எங்களால் அவருடைய நாமம் பூமியிலே மகிமைப்பட வேண்டும். அவருடைய கிரியைகள் நடத்தப்பட வேண்டும் அதற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். நாம் செய்கிற எந்த ஒரு ஊழியமாக இருந்தாலும், கிரியைகளாக இருந்தாலும் அதன் மூலமாக கிறிஸ்துவின் நாமம் மகிமைப்பட ஜெபிக்க வேண்டுகிறேன். நம்முடைய YOUTUBE நிகழ்ச்சிகள், இயேசுவை தினம் பார்ப்போம் பத்திரிக்கை ஊழியங்கள், உபவாச ஜெபகூட்டங்கள், சுவிசேஷ கூட்டங்கள், சுவிசேஷ பயிற்சி முகாம்கள் எல்லாவற்றிலும் தேவனுடைய நாமம் மகிமைப்பட கருத்தாய் ஜெபியுங்கள். கர்த்தர் நம்முடைய ஜெபத்தைக் கேட்டு இந்த பூமியில் அவருடைய கிரியைகளை நடப்பிக்கவும், மனுக்குலத்தைச் சந்திக்கவும் பாரப்பட்டு ஜெபிபோம். கர்த்தர் யார் என்பதை பூமியின் குடிகள் யாவரும் அறியும்படியாக ஜெபிப்போம். இயேசு கிறிஸ்துவின் மாறாத கிருபை நம் அனைவரோடும் இருந்து, நம்மைப் பாதுகாத்து நடத்துவதாக. தொடர்ந்து உங்கள் ஜெபத்தாலும், காணிக்கையினாலும் இந்த ஊழியத்தைத் தாங்கி, ஜெபிக்க வேண்டிக் கொள்ளுகிறேன்.



*இயேசுவின் பணியில்,*

L. Vincentraj

(சகோ. L. வின்சென்ட்ராஜ்)



# நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள்

சகோ.L.வின்சென்ட்ராஜ்

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த புதிய வருஷத்தில் அடியெடுத்து வைக்கிற உங்களை இயேசுவின் நாமத்தில் ஆசீர்வதிக்கிறேன். வருஷங்கள் வரும் போகும், மாதங்கள் வரும் போகும் ஆனால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவோ மாறாதவர், அவருடைய வார்த்தையோ மாறாதவைகள், அவைகள் இன்றைக்கும் நிறைவேறுகிறது, நடந்து கொண்டிருக்கிறது. இயேசு சொன்னார் மத் 5:17-ல் நியாயப்பிரமாணத்தையானலும், தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக் கொள்ளாதேயுங்கள், அழிக்கிறதற்கு அல்ல நிறைவேற்றுகிறதற்கே வந்தேன் என்றார். அதனால் தான் நாம் தேவனுடைய வார்த்தையை நம்பி, மாதங்களிலும், வருஷங்களிலும் அதை நினைப்பூட்டி, அந்த வார்த்தைகளைப் பிடித்துக் கொண்டு அவை நிறைவேற ஜெபிக்க வேண்டும். இந்த புதிய வருஷத்திலே தேவன் நம்மைப் பார்த்து சொல்லுகிறார் நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள் என்று. என்னுடைய மகிமையினாலே, என்னுடைய வல்லமையினாலே, என்னுடைய வார்த்தையினாலே, என்னுடைய கிரியைகளினாலே நிரப்புங்கள் என்றார். தேவன் பாவஞ்செய்த தூதர்களையும், பாவஞ்செய்து அவருக்கு விரோதமாய் வாழ்ந்த மனுகுலத்தையும் அழித்து சங்காரம் பண்ணினார். 2 பேதுரு 2:4,5-ல் பாவஞ்செய்த தூதர்களை தேவன் தப்பவிடாமல், அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக்கொடுத்து, பூர்வ உலகத்தையும்

தப்பவிடாமல் நீதியைப் பிரசங்கித்தவனாகிய நோவா முதலான எட்டுப் பேரைக் காப்பாற்றி, அவபக்தியுள்ளவர்கள் நிறைந்த உலகத்தின்மேல் ஜலப்பிரளயத்தை வரப்பண்ணினார். அதனால் முழுமனுக்குலமும் அழிந்து பூமியிலே வெறும் எட்டுப்பேர் மாத்திரம் சஞ்சரித்தார்கள். அதாவது எல்லாத் தலைமுறையும் அழிந்து புதிய ஒரு தலைமுறையை தேவன் உண்டாக்கினார். இதுவரை கூட இருந்தவர்கள், வாழ்ந்தவர்கள் எல்லாரும் பூமியை விட்டே கடந்து போய்விட்டார்கள், இப்பொழுது ஒரு புதிய வானம், புதிய பூமிக்குள் வந்துவிட்டார்கள். இந்த எட்டுப்பேரைப் பார்த்து, நீதியாய் வாழ்ந்து, நீதியைப் பிரசங்கித்த நோவாவைப் பார்த்து ஒன்றுமில்லாத இந்த உலகத்தில், வெறுமையான இந்த உலகத்தில் நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள் என்றார். ஒரு காலத்தில் அவனோடு வாழ்ந்த ஜனங்கள் பொல்லாதவர்களும், முரட்டுத்தனமுள்ளவர்களும், அடங்காதவர்களும், தேவனை தூஷிக்கிறவர்களும், மனம்போன போக்கில் வாழ்ந்தவர்களுமாய் இருந்தார்கள். இப்பொழுது அப்படியல்ல இவர்கள் தான் ராஜா, இவர்கள் தான் மந்திரி, இவர்கள் தான் அதாவது இந்த எட்டுப்பேர் தான் எல்லாம். இவர்களைப் பார்த்து தான் தேவன் சொன்னார் நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள் என்று. என்னுடைய மகிமையினால் நிரப்புங்கள், என்னுடைய நீதியினால், என்னுடைய வார்த்தையினால் நிரப்புங்கள் என்றார். இதுவரை பழைய உலகத்தில் வாழ்ந்த ஜனங்களை, சாத்தான் அசுத்தங்களால், அருவருப்புக்களால் நிரப்பி வைத்திருந்தான். அப் 13:10-ல் எல்லாக் கபடமும், எல்லாப் பொல்லாங்கும் நிறைந்தவனே, பிசாசின் மகனே, நீதிக்கெல்லாம் பகைஞனே, கர்த்தருடைய செம்மையான வழிகளைப் புரட்டுவதில் ஓயமாட்டாயோ? என்றார். இன்றைக்கு நாம் வாழும் உலகமும் இப்படித்தான் கர்த்தருடைய செம்மையான வழியை விட்டு புரட்டி, எல்லாக் கபடமும், பொல்லாங்குகளினால் நிறைந்து, மனிதன் தீமைகளையும், அசுத்தங்களையும், அருவருப்புகளையும், பொல்லாத கிரியைகளால் நிறைந்து காணப்படுகிறான். இயேசு சொன்னார் இன்றைக்கு வாழும் மனிதர்கள் தங்கள் பாவங்களின் அளவை நிரப்பிக் கொண்டே இருக்கிறார்கள். மத் 23:32-ல் நீங்களும் உங்கள் பிதாக்களின் அக்கிரம அளவை நிரப்புங்கள், நிரப்புகிறீர்கள் என்றார். ஒரு மனிதனுடைய பாவமும், ஒரு தேசத்தினுடைய பாவமும் இந்த பூமியை நிரப்பும் போது, நிறைவாகும் போது என்ன நடக்கும்?, அங்குதான் தேவ கோபமும், அழிவும் உண்டாகிறது. இதைத்தான் நாம் வேதத்தில் பல இடங்களில் பார்க்கிறோம். ஆதி 15:16-ல் நாலாம் தலைமுறையிலே அவர்கள் இவ்விடத்துக்குத் திரும்பி வருவார்கள். ஏனென்றால் எமோரியருடைய அக்கிரமம், பாவம் இன்னும் பூமியிலே நிறைவாகவில்லை என்றார்கள். இந்த பூமியிலே மனிதனுடைய அக்கிரமங்களும், பிசாசின் கிரியைகளும் வானளவாய் பெருகிக் கொண்டிருக்கிறது. எங்கும் துன்மார்க்கம், எதிலும் துன்மார்க்கம், இப்படிப்பட்ட உலகத்திலே பழைய மனுக்குலத்தை அழித்து, புதிய சந்ததியை, பரிசுத்த சந்ததியை தேவன் உருவாக்கவும், நோவாவை உயிரோடு காப்பாற்றி, நீங்கள் எட்டுப்பேர் இந்த பூமியை நிரப்பி, பலுகிப் பெருகுங்கள், பூமியை நிரப்புங்கள் என்றார். இன்றைக்கு நாம் தேவனால், அவருடைய வல்லமையினால் நிரப்பப்பட வேண்டும். நாம் இந்த பொல்லாத உலகிலே மாண்டு, மடியாதபடி எத்தனையோ கொடிய கொள்ளை நோய்க்கும், தீங்கிற்கும் தேவன் நம்மை விலக்கிக் காத்து, பூமியிலே உயிரோடு நம்மை வைத்திருக்கிறார். சீர்கெட்ட இந்த பூமியை, இன்றைக்கு நாம் அவருடைய மகிமையினாலும், கிருபையினாலும் நிரப்ப வேண்டும். அதற்குத் தான் ஆண்டவராகிய தேவன் இன்னும் ஒரு புதிய வருஷத்தைக் கொடுத்து, ஆயுள் நாட்களைக் கூட்டிக் கொடுத்து நம்மை உயிரோடு விட்டு வைத்திருக்கிறார். நமக்கு பூமியிலே இன்னும் ஒரு தருணம் தந்திருக்கிறார். எதற்காக? உங்கள் காரியங்களை நடப்பிக்க, உங்கள் வேலையை மாத்திரம் செய்ய, உங்கள் காரியங்களைப் பார்க்க அல்ல நாம் தேவனுடைய காரியங்களை நடப்பிக்கத்தான். தேவன் நோவாவை

“ நாம் வாழும் உலகமும் இப்படித்தான் கர்த்தருடைய வழியை விட்டு புரட்டி, எல்லாக் கபடமும், பொல்லாங்குகளினால் நிறைந்து, மனிதன் தீமைகளையும், அசுத்தங்களையும், அருவருப்புகளையும், பொல்லாத கிரியைகளால் நிறைந்து காணப்படுகிறான். ”

பெருவெள்ளப் பெருக்கிலே இருந்து காப்பாற்றி, திரும்ப பூமியிலே வாழ, ஒரு வாய்ப்பைக் கொடுத்து நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்புங்கள் என்றார். இந்த புதிய வருஷத்திலே நாம் பலுகவும், பெருகவும், நிரப்பவும், நம்மை தேவனிடத்தில் அர்ப்பணித்தால் தேவன் நம்மைக் கொண்டு பூமியிலே என்ன செய்ய சித்தம் வைத்திருக்கிறாரோ அதைச் செய்து, அவருக்கு மகிமையாய் வாழும்படி நமக்கு கிருபை செய்வார். வேதம் சொல்லுகிறது மீகா 3:8-ல் நானோ, யாக்கோபுக்கு அவன் மீறுதலையும், இஸ்ரவேலுக்கு அவன் பாவத்தையும் அறிவிக்கும்படி, கர்த்தருடைய ஆவி அருளின பலத்தினாலும், நியாயத்தினாலும், பராக்கிரமத்தினாலும் நிரப்பப்பட்டிருக்கிறேன் என்றார். நம்மையும் அவருடைய மகிமையினாலும், கிருபையினாலும் நிரப்பி இந்த பூமியில் அவருக்காக ஜீவிக்க நம்மை உயிரோடு வைத்திருக்கிறார். அவருடைய வல்லமையினாலும், ஆற்றலினாலும் நம்மை நிரப்பி, நாம் இந்த பூமியை நிரப்ப, நம்மைப் பயன்படுத்துவாராக. இதைத்தான் தேவன் நோவாவுக்கு கட்டளையிட்டார், இதை செய்யுங்கள் என்றார். நாம் இந்த பூமியை இயேசுவின் நாமத்தினால் நிரப்பவும், அவருடைய வார்த்தையாகிய சுவிசேஷத்தினால் நிரப்பவும் தேவன் நமக்கு கட்டளையிட்டிருக்கிறார். அதைச் செய்யவே இந்த புதிய வருஷத்தை தேவன் கொடுத்திருக்கிறார். போகட்டும் எதைச் செய்ய வேண்டும், எதினாலே நிரப்ப வேண்டும் என்பதைப் பார்போம்.

## உங்கள் ஆத்துமாவை நிரப்புங்கள்

நான் விடாய்த்த ஆத்துமாவைச் சம்பூரணமடையப்பண்ணி, தொய்ந்த எல்லா ஆத்துமாவையும் நிரப்புவேன் என்றார் எரே 31:25. நம்மை பார்த்து பூமியை நிரப்புங்கள் என்றவர், அதற்கு முன்னதாக நம்மை நிரப்ப, நிறைவாக்க விரும்புகிறார். எபே 1:23-ல் எல்லாவற்றையும், எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார் என்று சொல்லப்பட்டுள்ளது. எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவர் நம்முடைய தேவன். எந்த ஒரு பூமியாக இருந்தாலும், எந்த ஒரு மனிதனுடைய இருதயமாக, ஆத்துமாவாக இருந்தாலும், அதை வெறுமையாக விடாமல் நிரப்ப சித்தம் கொண்டிருக்கிறார். பூமியானது ஒழுங்கின்மையும், வெறுமையுமாக இருந்தது. அப்படிப்பட்ட உலகத்தை தேவன் தேவஆவியினாலே நிரப்பினார். அந்த தேவன் இன்றைக்கு மனிதர்களுடைய ஆத்துமாவை நிரப்புவேன் என்கிறார். ஏனென்றால் சாத்தான் எந்தெந்த ஆத்துமா வெறுமையாக இருக்கோ, தேவனை அறியாமல், தேவனால் நிரப்பப்படாமல் இருக்கிறதோ, அந்த ஆத்துமாவை குறிவைத்து தாக்க ஆரம்பிக்கிறான், தேவனை விட்டு பிரிக்க ஆரம்பிக்கிறான். அப்பொழுது அந்த ஆத்துமா தெய்ந்து போய், பலவீனப்பட்டு தேவபிரசன்னத்தை அனுபவிக்க முடியாதபடி வெறுமையிலும், வேதனையிலும் வாழுகின்றது. நாம் எவ்வளவு தான் ஓடினாலும், உழைத்தாலும், சம்பாதித்தாலும் பொருளாதாரத்தில் முன்னேற முடியாமல் பற்றாக்குறையோடும் வேதனையோடும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நமக்கு நம் மேலே, நம்மைக் குறித்தே ஒரு திருப்தியில்லாமல் போய் விடுகிறது. வேதம் சொல்லுகிறது ஏசாயா 55:2-ல் நீங்கள் அப்பமல்லாததற்காகப் பணத்தையும், திருப்தி செய்யாத பொருளுக்காக உங்கள் பிரயாசத்தையும் செலவழிப்பானேன்?. நீங்கள் எனக்குக் கவனமாய்ச்செவிகொடுத்து, நலமானதைச் சாப்பிடுங்கள், அப்பொழுது உங்கள் ஆத்துமா கொழுப்பான பதார்த்தத்தினால் மகிழ்ச்சியாகும் என்றார். உலகமோ, நாம் வைத்திருக்கிற பொருட்களோ, வசதி வாய்ப்போ, பணமோ நம்மை திருப்தியாக்குவதில்லை. நம்முடைய ஆத்துமாவில் வந்து தேவன் தங்கி, அதை நிரப்பினால் தான் அது திருப்தியாகும். நம்மை புல்லுள்ள இடத்தில், தேவ பிரசன்னத்தில் திருப்தியாய் நடத்துகிறவர் பரிசுத்த ஆவியானவர் மாத்திரமே. அதனால் தான் தாவீது ராஜா சொல்லுகிறார் சங் 23:2,3-ல் அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து,

“ உலகமோ, நாம் வைத்திருக்கிற பொருட்களோ, வசதி வாய்ப்போ, பணமோ நம்மை திருப்தியாக்குவதில்லை. நம்முடைய ஆத்துமாவில் வந்து தேவன் தங்கி, அதை நிரப்பினால் தான் அது திருப்தியாகும். ”

www.jesuslives.in

அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகிறார். அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார் என்றார். புதிய வருஷத்தில் தேவன் நம்முடைய ஆத்துமாவை பரிசுத்த ஆவியானவரால், அவருடைய திட்டத்தால், அவருடைய வல்லமையினால் நிரப்பப்போகிறார். பெலவீனமுள்ள நம்முடைய ஆத்துமா, தொய்ந்துபோன நம்முடைய ஆத்துமா, அவருடைய பெலத்தால், வல்லமையினால் நிரப்பப்படவும், எல்லா தொய்ந்த ஆத்துமாவையும் நிரப்புவேன் என்றார். இந்த வருஷத்திலே நீங்கள் அவரால் நிரப்பப்பட்டால் தான், மற்றவர்களை தேவனுக்குள் வழிநடத்த முடியும். அவர்கள் வெறுமைகளை மாற்றி தேவஆவிக்குள் வழிநடத்த முடியும். அதற்கு முதலாவது உங்கள் ஆத்துமாவை தேவன் அவருடைய சகல ஞானத்தாலும், பெலத்தாலும், மகிமையினாலும் நிரப்ப வேண்டும். சங் 107:8-ல் தவனமுள்ள ஆத்துமாவைக் கர்த்தர் திருப்தியாக்கி, பசியுள்ள ஆத்துமாவை நன்மையினால் நிரப்புகிறார் என்று சொல்லப்பட்டுள்ளது. இந்த செய்தியை வாசித்துக் கொண்டிருக்கும் என் அன்பு சகோதர, சகோதரிகளே உங்கள் புத்தியில், உங்கள் மூளையில் உண்டான, உங்கள் இருதயத்தில், உங்கள் ஆத்துமாவில் உண்டான சகல திட்டங்களையும், எண்ணங்களையும் கர்த்தர் மாற்றி, அதை உங்களிடத்திலிருந்து அப்புறப்படுத்தி, அவருடைய நோக்கத்தாலும், உன்னத திட்டத்தாலும் நிரப்ப விரும்புகிறார். ஆகவே தான் அவர் சொல்லுகிறார் நான் விடாய்த்த ஆத்துமாவை



சம்பூரணமடையப்பண்ணி, தொய்ந்த எல்லா ஆத்துமாவையும் நிரப்புவேன் என்றார். அப்படி நிரப்பப்பட்டால் தான் நீங்கள் இந்த பூமியில் தேவனை வெளிப்படுத்தி, அவருடைய காரியங்களைச் செய்யவும், நிரப்பவும் முடியும். இப்படித்தான் அவர் உன்னத நோக்கத்தை தேவன், அவர் பிள்ளைகள் மூலமாகச் செய்தார். லூக்கா 1:15-ல் யோவான்ஸ்நானகன், இயேசுவுக்கு வழியை ஆயத்தப்படுத்த வரும்போது தேவன் அவரை பரிசுத்த ஆவியினால் நிரப்பி இருந்தார். அவர் தாயின் வயிற்றிலிருக்கும்போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருந்தான். சீஷர்கள் வாழ்க்கையைப் பாருங்கள் இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு தடுமாறி, அவரைப் பின்பற்ற முடியாமல் தவித்து, தொய்ந்து போன, துவண்டு போன அவர்களை தேவன் பரிசுத்த ஆவியினால் அளவில்லாமல் நிரப்பி, அவர்களைக் கொண்டு பலத்த காரியங்களைச் செய்தார். அப் 4:31-ல் அவர்கள் ஜெபம் பண்ணினபோது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு தேவவசனத்தைத் தைரியமாய்ச் சொன்னார்கள். ஆம் பரிசுத்த ஆவியினால் நம்முடைய ஆத்துமாவில் நிரப்பப்பட்டால் தான் நாம் இந்த பூமியில் அவருடைய செயல்களை, கிரியைகளை செய்து நிரப்ப முடியும். இதைத்தான் தேவன் நோவாவுக்கு கட்டளையிட்டார். நீங்கள் பலுகிப் பெருகி பூமியை தேவமயமாய், பரிசுத்த ஆவியின் வல்லமை மயமாய் நிரப்புங்கள் என்றார்.தண்ணீர் கடலை நிரப்பி இருக்கிறது போல, பூமியில் வாழும் ஜனங்கள் என்னைப் பற்றும் அறிவினால் நிரப்பப்பட வேண்டும். என்னை அறிந்து கொள்ள வேண்டும். என்னை ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும் என்றார். அதைச் செய்யத்தான் ஆண்டவராகிய தேவன் இந்த புதிய வருஷத்தைக் கொடுத்திருக்கிறார். இந்த வருஷத்திலே நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள் என்றார். என் ஆண்டவராகிய தேவன் தாமே உங்களை பலுகவும், பெருகவும் பண்ணி நிரப்புகிறவர்களாக மாற்றுவாராக.

# வார்த்தையால் நிரப்புங்கள்

இயேசு வேலைக்காரரை நோக்கி ஜாடியிலே தண்ணீர் நிரப்புங்கள் என்றார். அவர்கள் அவைகளை வாய் மட்டும் நிறைய நிரப்பினார்கள். இந்த புதிய வருஷத்தில் வெறுமையான கற்சாடிகளை தண்ணீரால் நிரப்புங்கள் என்றார். இதுவரை இல்லாத அளவுக்கு நாம் தேவனுடைய வார்த்தையால் நம்மை நிரப்பிக் கொள்ள வேண்டும். எபே 5:26-ல் தாம் அதை திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும் என்று சொல்லப்பட்டுள்ளது.

தண்ணீராகிய தேவ வசனம் நம் வாழ்க்கையில் உள்ள எப்பேர்ப்பட்ட கறையாக, திரையாக இருந்தாலும் தேவனுடைய வார்த்தை அதை சுத்தப்படுத்திவிடும். இயேசு சொன்னார் யோவான் 15:3-ல் நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள் என்றார். ஆம் இயேசுவின் வார்த்தையை அனுதினமும் படிக்கும் போது, கேட்கும் போது அது நம்மை தூய்மைப்படுத்தி, சுத்திகரித்து, உலகத்தினால் கறைபடாமல் காத்து, தேவனுக்கு முன்பாக நம்மை நிறுத்தி விடும், இல்லை என்றால் நம்முடைய ஆத்துமா, மனம் வெறுமையாக இருக்கும் போது சாத்தான் தன்னிலும் பொல்லாத வேறு ஏழு ஆவிகளைத் தன்னோடே கூட்டிக் கொண்டு வந்து, உட்புகுந்து அங்கே குடியிருக்கும், அப்பொழுது அந்த மனுஷனுடைய முன்னிலைமையிலும், அவன் பின்னிலைமை அதிக கேடுள்ளதாயிருக்கும் மத் 12:45 அப்படிச் சொல்லுகிறது. அதனால் தான் தேவன் தம்முடைய மகத்துவமான வேதத்தை எழுதி நம்முடைய கையில் கொடுத்திருக்கிறார். நாம் அதை வாசிக்க வேண்டும். அதை நம்முடைய இருதயத்திலும், சிந்தையிலும் நிரப்ப வேண்டும். இதைத்தான் கானாவூரில் கல்யாண வீட்டில் திராட்சரசம் தீர்ந்தபோது இயேசு அவர்களை செய்யச் சொன்னார். இந்த கற்சாடிகளில் தண்ணீரை நிரப்புங்கள் என்றார். அவர்கள் அதை நிரப்பினார்கள் அற்புதம் நடந்தது. இன்றைக்கு நாம் நம்முடைய தேசத்தில், நம்முடைய குடும்பத்தில் தண்ணீராகிய வேதவசனத்தால் நிரப்ப வேண்டும் ஆதி 21:19-ல் அவள் தேவனை நோக்கி கத்தி கதறி துருத்தியிலே என் எஜமான் கொடுத்தனுப்பிய தண்ணீர்



தீர்ந்து விட்டது, பிள்ளையும், நானும் பிழைப்பதற்கு தண்ணீர் இல்லை, பிள்ளை . சாகிறதை நான் பார்க்க மாட்டேன் என்று சத்தமிட்டு அழுதாள். தேவன் அவளுடைய கண்களைத் திறந்தார், அப்பொழுது அவள் ஒரு தண்ணீர்த் துரவைக் கண்டு போய், துருத்தியிலே தண்ணீர் நிரப்பிக் கொண்டு வந்து பிள்ளைக்குக் குடிக்கக் கொடுத்தாள். நிரப்பினாள், குடிக்கக் கொடுத்தாள் இன்றைக்கு தேவனுடைய அற்புதங்கள் பூமியிலே முடிந்து விடவில்லை. அது நடந்து கொண்டு தான் இருக்கிறது. அதற்கு நாம் இந்த பூமியை, மனிதர்களுடைய இருதயத்தை தேவனுடைய வார்த்தையினாலே நிரப்பி விடவேண்டும். இதைத்தான்

ரெபெக்காள் செய்தாள். ஆபிரகாமின் வீட்டு விசாரனைக்காரராக இருந்த எலியேசர் ஈசாக்குக்கு பெண் பார்க்கப் போனபோது அவனுக்கும் தண்ணிர் தீர்ந்து விட்டது. அப்பொழுது ரெபெக்காள் என்ன செய்தாள்? ஆதி 24:17-20 வரையுள்ள வசனங்களில் உன் குடத்திலிருக்கிற தண்ணீரில் கொஞ்சம் குடிக்கத் தரவேண்டும் என்றான். அதற்கு அவள் குடியும் என் ஆண்டவனே என்று சீக்கிரமாய்க் குடத்தைத் தன் கையில் இறக்கிக்கொண்டு, அவனுக்குக் குடிக்கக் கொடுத்தாள். கொடுத்த பின், உம்முடைய ஒட்டகங்களும் குடித்துத் தீருமட்டும் அவைகளுக்கும் மொண்டு வார்ப்பேன் என்றாள். அவர்கள் நிரப்பப்படும் மட்டும், போதும் என்று சொல்லும் மட்டும் நிரப்பிக் கொண்டே இருந்தாள். இன்றைக்கு தண்ணீரில்லாத, அபிஷேகமில்லாத, பரிசுத்த அவியானவர் இல்லாத இந்த உலகத்திலே, இந்த பூமியிலே நாம் பரிசுத்த ஆவியானவராலும், அவருடைய வார்த்தையினாலும் இந்த பூமியில் வாழுகின்ற ஜனங்களை நிரப்ப வேண்டும். இதைதான் தேவன் இந்த வருடம் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார். ஏசாயா 27:6-ல் யாக்கோபு வேர்பற்றி, இஸ்ரவேல் பூத்துக்காய்ந்து உலகத்தைப் பலனால் நிரப்பும் நாட்கள் வரும் என்றார். இனி இந்த உலகத்தை, அதில் வாழும் மனிதர்களை தேவனுக்குப் பலன் கொடுக்கிறவர்களாக மாற்றும் ஒரு உன்னதமான ஊழியத்தை நாம் செய்ய வேண்டும். அதற்காகத் தான் தேவன் நம்மை ஒரு புதிய ஆண்டிற்குள், புதிய வருஷத்திற்குள் நம்மை கொண்டு போகிறார். இந்த பூமியில் இப்பொழுது வாழும் சந்ததிமேல் தேவனுடைய ஆவி ஊற்றப்படும்படி நாம் செயல்பட வேண்டும். கிரியைச் செய்ய வேண்டும், ஊழியம் செய்ய வேண்டும். இதைத்தான் எலிசா செய்தார் 2 இராஜா 3:16,17-ல் கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால் இந்த பள்ளத்தாக்கிலே எங்கும் வாய்க்கால்களை வெட்டுங்கள், நீங்கள் காற்றையும் காணமாட்டீர்கள், மழையையும் காணமாட்டீர்கள், அனாலும் நீங்களும், உங்கள் ஆடுமாடுகளும் உங்கள் மிருகஜீவன்களும் குடிக்கும்படிக்கு, இந்தப்பள்ளத்தாக்கு தண்ணிரால் நிரப்பப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார். எவ்வளவு அருமையான ஒரு வழி நடத்துதல், எவ்வளவு அருமையான அற்புதம். பஞ்சத்திலும், பட்டினியிலும், பற்றக்குறையிலும் மூழ்கிய தேசத்தை தேவன் ஆசீர்வதத்தினால் நிரப்பினார், அற்புதத்தினால், தண்ணீரினால் நிரப்பினார். ஜனங்களுடைய வெறுமையை மாற்றி, வேதனையை மாற்றி அவர்கள் வாய்யைத் திறந்து துதிக்கும்படி தேவன் இறங்கினார். சங்கீதம் 81:10-ல் உன்னை எகிப்து உன்னை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப் பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே, உன் வாயை விரிவாய்த்திற, நான் அதை நிரப்புவேன் என்றார். அதைத்தான் ஆண்டவராகிய தேவன் இந்த புதிய வருஷத்தில் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார். ஆகவே தான் நோவாவைப் பார்த்து நீங்கள் பலுகிப் பெருகி இந்த பூமியை நிரப்புங்கள் என்றார். இன்றைக்கு இந்த செய்தியை வாசிக்கின்ற என் அன்பு சகோதர சகோதரிகளே நாம் வாழும் இந்த காலத்தை, நாட்களை நாம் சரியாய் பயன்படுத்தி கர்த்தருக்கு மகிமையாக, அவர் கொடுத்த இந்த ஊழியத்தை நாம் நிறைவேற்றி, பூமியை அவருடைய வல்லமையினாலும், வார்த்தையினாலும் நிரப்பி அவருக்கு மகிமையைக் கொண்டு வருவோம். என் ஆண்டவராகிய தேவன் தாமே இந்த புதிய வருஷத்திலே நீங்கள் பலுகவும், பெருகவும், நிரப்பவும் உங்களை பயன்படுத்துவாராக. ஆமென்.

> “இன்றைக்கு தண்ணீரில்லாத, அபிஷேகமில்லாத, பரிசுத்த அவியானவர் இல்லாத இந்த உலகத்திலே, இந்த பூமியிலே நாம் பரிசுத்த ஆவியானவராலும், அவருடைய வார்த்தையினாலும் இந்த பூமியில் வாழுகின்ற ஜனங்களை நிரப்ப வேண்டும்”



# இருக்கிறவராகவே இருக்கிறேன்

சகோதரி. கலா வின்சென்ட்ராஜ்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் சகோதரிகளுக்கு புத்தாண்டு வாழ்த்துக்கள். காலங்கள் மாறினாலும், ஆண்டுகள் மாறினாலும் நம் ஆண்டவர் இயேசு இருக்கிறவராகவே இருக்கிறவர். கடந்த வருடங்களில் எல்லாம் நம் கூட இருந்து நம்மை குறைவில்லாமல் காத்து ஆசீர்வதித்து நடத்தினவர், இந்த புதிய வருடத்திலும் நம்மோடு இருந்து ஆச்சரியமாய் நம்மை நடத்துவார். இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தின் அடிமைத்தனத்தில் சிக்கித்தவித்தபோது நாம் இதிலிருந்து விடுபட முடியுமா? யார் நம்மைக் காப்பாற்றுவார் இந்த வேதனையிலிருந்து நாம் வெளியே வருவோமா? என்று கலங்கிக் கொண்டிருந்த அவர்கள் கூக்குரலைக் கேட்ட தேவன் மோசேயை அழைத்து, என் ஜனங்கள் அனுபவிக்கிற வேதனைகளை அறிந்திருக்கிறேன், அவர்கள் கூக்குரல் என் சந்நிதியில் வந்து எட்டினது. எகிப்தியர் அவர்களை ஒடுக்குகிற ஒடுக்குதலை கண்டேன். உன்னை பார்வோனிடத்தில் அனுப்புகிறேன் வா என்று அழைத்தார். மோசே கர்த்தரிடம் உங்கள் பிதாக்களின் தேவன் என்னை உங்களிடத்தில் அனுப்பினார் என்றால் அவருடைய நாமம் என்ன? என்று அவர்கள் என்னிடத்தில் கேட்பார்களே அவர்களுக்கு என்ன சொல்வேன் என்றான். யாத் 3:14,15—ல் அதற்கு தேவன், இருக்கிறவராக இருக்கிறேன் என்று மோசேயுடனே சொல்லி இருக்கிறேன் என்பவர் என்னை உங்களிடத்துக்கு அனுப்பினார் என்று இஸ்ரவேல் புத்திரரோடே சொல்வாயாக என்றார். மேலும் தேவன் மோசேயை நோக்கி ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாயிருக்கிற உங்கள் பிதாக்களுடைய தேவனாகிய கர்த்தர் என்னை உங்களிடத்திற்கு அனுப்பினார் என்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்வாயாக என்றைக்கும் இதுவே என் நாமம், தலைமுறை தலைமுறைதோறும் இதுவே என்

பேர்ப்பிரஸ்தாபம் என்றார். நான் இருக்கிறேன் என்று போய்ச் சொல்லு என்று மோசேயை அனுப்பி எல்லாவித அடிமைத்தனத்திலிருந்தும் அவர்களை வெளியே கொண்டு வந்தார். அதே தேவன் நாம் கடந்து வருகிற எந்த சூழ்நிலை நடுவிலும் நம்மைக் காப்பாற்றி, மீட்டு வெளியே கொண்டு வர அவர் இருக்கிறவராகவே இருக்கிறார். யோவான் 8:58-ல் அதற்கு இயேசு, ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். என்ன ஆகுமோ?, எப்படி நடக்குமோ? இதெல்லாம் நடக்குமா? என்று சோர்ந்து போகாதிருங்கள். ஐந்து அப்பம், இரண்டு மீன் தான் இருந்தது ஆனால் சாப்பிட ஐயாயிரத்திற்கும் அதிகமான பேர் இருந்தார்கள். எப்படிப்போதும்? நன்றாய் சாப்பிடக்கூடிய ஒரு நபருக்குத்தான் அது சரியாய் இருக்கும். ஆனால் இயேசு இருக்கிறார், அவர் இருந்தால் போதும் ஐயாயிரத்திற்கும் அதிகமான பேர் திருப்தியாய் சாப்பிட்டு மீதம் எடுக்க இயேசு போதுமானவராய் இருந்தார். அதே ஆண்டவர் இயேசு உங்களையும் நடத்த வல்லவர். நம்மிடம் உள்ள கொஞ்சத்தை ஆசீர்வதித்து, பெருகப்பண்ண இயேசு இருக்கிறவராகவே இருக்கிறார்.

> “ஒரு பிரச்சனையா? சமாளித்து விடலாம். ஆனால் வாழ்க்கையே பிரச்சனை என்றால் சமாளிக்க முடியவில்லை”

## நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்

நாம் வாழுகிற இந்த கடைசி காலத்தில் தேசத்தில் நடக்கிற காரியங்களைக் காணும் போது பயம் சூழுகிறது. எத்தனை கொலைகள், கொள்ளைகள், பாலியல் வன்கொடுமைகள், ஏமாற்றுதல், லஞ்சம், ஊழல், மதுபானங்கள், போதை வஸ்துக்களின் பயன்பாடுகள் அதிகரிப்பது, முறைகேடான காரியங்கள், கலாச்சார சீரழிவுகள், அரசியலின் காரியங்கள், விலைவாசி உயர்வுகள் இதைப் பார்க்கும் போது இந்த பொல்லாத உலகில் பாதுகாப்பாய் வாழ முடியுமா? வரும் சந்ததிகளின் எதிர்காலம் எப்படி இருக்கப் போகிறது?. திருச்சபைகள், ஊழியங்களின் நிலை என்னவாகும்? பயபக்தி நிலைநிற்குமா? பூமியில் சந்ததிகள் கர்த்தரை சேவிக்குமா? இன்னும் இது போன்ற ஜீ.எஸ்.டி வரிச்சுமைகள், பல்வேறு புதிய சட்டங்கள், வேத வசனத்தின் நிறைவேறுதல், ஆண்டவரின் வருகை சமீபம் இதையெல்லாம் யோசிக்கும் போது பயம் வருகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் இருக்கும் நம்மைப் பார்த்துதான் ஆண்டவர் நீ பயப்படாதே! நான் உன்னுடனே இருக்கிறேன் என்று சொல்கிறார். ஏசாயா 41:10, ஏசாயா 43:5-லும் பயப்படாதே! நான் உன்னோடே இருக்கிறேன். நான் உன் சந்ததியைக் கிழக்கிலிருந்து வரப்பண்ணி, உன்னை மேற்கிலும் இருந்து கூட்டிச் சேர்ப்பேன் என்கிறார். 2 நாளா 20:3-ல் அப்பொழுது யோசபாத் பயந்து, கர்த்தரைத் தேடுகிறதற்கு ஒருமுகப்பட்டு, யூதாவெங்கும் உபவாசத்தைக் கூறுவித்தான் என்று பார்க்கிறோம். ஏன்? அவனைச் சுற்றிலும் ஏராளமான இராஜாக்கள் சூழ்ந்து விட்டார்கள். யோசபாத் பயந்தான் ஒரு பிரச்சனையா? சமாளித்து விடலாம். ஆனால் வாழ்க்கையே பிரச்சனை என்றால் சமாளிக்க முடியவில்லை என்பது போல யோசபாத் கர்த்தரை நோக்கி எங்கள் பிதாக்களின் தேவனே! ஒருவரும் உம்மை எதிர்க்கக்கூடாது. 12-ஆம் வசனத்தில் எங்கள் தேவனே, அவர்களை நியாயந் தீர்க்கமாட்டீரோ? எங்களுக்கு விரோதமாய் வந்த இந்த ஏராளமான கூட்டத்திற்கு முன்பாக நிற்க எங்களுக்குப் பெலனில்லை, நாங்கள் செய்ய வேண்டியது இன்னதென்று எங்களுக்குத் தெரியவில்லை. ஆகையால் எங்கள் கண்கள் உம்மையே நோக்கிக் கொண்டிருக்கிறது என்று ஜெபித்தான். கர்த்தருடைய ஆவியானவர் இறங்கி பேசினார். 15-ஆம் வசனத்தில் சகல யூதா கோத்திரத்தாரே, எருசலேமின் குடிகளே, ராஜாவாகிய யோசபாத்தே, கேளுங்கள், நீங்கள் இந்த ஏராளமான கூட்டத்திற்குப் பயப்படாமலும், கலங்காமலும் இருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். இந்த யுத்தம் உங்களுடையதல்ல, தேவனுடையது என்று யோசபாத்தோடு கர்த்தர் இருந்து, அவன் பயந்த விஷயத்தை ஒன்றுமில்லாமல் போகச்செய்து, ஜெயத்தைக் கொடுத்து காப்பாற்றினவர், நம்மையும், நாம் பயப்படுகிற எந்த காரியத்திலும் கைவிடாமல் நீ பயப்படாதே! நான் உன்னுடனே இருக்கிறேன் என்று

கூட இருந்து தப்புவித்து, நடத்துவார். பயப்படாதிருங்கள், இயேசுவை நோக்கி யோசபாத்தைப் போல ஜெபியுங்கள். இஸ்ரவேலர் கானானைச் சுற்றிப்பார்க்க போனபோது எதிரிகளை கண்டு பயந்து விட்டார்கள். அவர்கள் நம்மை விட பெரியவர்கள், நாங்கள் அவர்கள் பார்வையில் வெட்டுக்கிளிகளைப் போல் இருந்தோம், எங்கள் பார்வையிலும் அப்படியே இருந்தோம் என்று தங்களும் தளர்ந்ததுமன்றி மற்றவர்களின் மனதையும் கரையப் பண்ணினார்கள். விசுவாசத்தை விட்டு வழுவப்பண்ணினார்கள். ஆனால் காலேபும், யோசுவாவும் தேசத்தைப்பற்றிய நல்ல செய்தியைக் கொண்டு வந்தார்கள், மற்ற பத்துபேரும், நாம் எகிப்துக்கே திரும்பிப் போய் விடுவோம் என்றார்கள். நாங்களும் எங்கள் குடும்பத்தினரும் வனாந்திரத்திலே செத்துப் போகும்படி எங்களைக் கொண்டு வந்ததென்ன என்று முறுமுறுத்து, அழுது மோசேக்கும், ஆரோனுக்கும் விரோதமாக எழும்பினார்கள். அப்போது தான் யோசுவாவும், காலேப்பும் எண் 14:9-ல் கர்த்தருக்கு விரோதமாக மாத்திரம் கலகம் பண்ணாதிருங்கள், அந்த தேசத்தின் ஜனங்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டியதில்லை. அவர்கள் நமக்கு இரையாவார்கள், அவர்களைக் காத்த நிழல், அவர்களை விட்டு விலகிப் போயிற்று. கர்த்தர் நம்மோடே இருக்கிறார், அவர்களுக்குப் பயப்பட வேண்டியதில்லை என்றார்கள். கர்த்தர் நம்மோடு இருக்கிறார், எதிரிகள் எவ்வளவு பலம் நிறைந்தவர்களாய் இருந்தாலும் நாம் அவர்களுக்குப் பயப்பட வேண்டாம். எரேமியாவை கர்த்தர் அழைத்த போது, நீ சிறுபிள்ளை என்று சொல்லாதே என்றார். எரே 1:8-ல் நீ அவர்களுக்குப் பயப்பட வேண்டாம், உன்னைக் காக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன் என்று கர்த்தர் சொன்னார். எரே 15:20-ல் உன்னை இந்த ஜனத்துக்கு எதிரே அரணான வெண்கல அலங்கமாக்குவேன். அவர்கள் உனக்கு விரோதமாக யுத்தம் பண்ணுவார்கள், ஆனாலும், உன்னை மேற்கொள்ள மாட்டார்கள். உன்னை இரட்சிப்பதற்காகவும், உன்னைத் தப்புவிப்பதற்காகவும் நான் உன்னுடனே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். உபா 20:1-ல் நீ உன் சத்துருக்களுக்கு எதிராக யுத்தஞ்செய்யப் புறப்பட்டுப் போகையில் குதிரைகளையும், இரதங்களையும், உன்னிலும் பெரிய கூட்டமாகிய ஜனங்களையும் கண்டால், அவர்களுக்குப் பயப்படாயாக. உன்னை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார். உபா 7:17-21 வரை வாசிக்கும் போது அந்த ஜாதிகள் என்னிலும் ஜனம் பெருத்தவைகள், நான் அவர்களைத் துரத்திவிடுவது எப்படி முடியும் என்று சொல்வாயானால் பார்வோனுக்கும், எகிப்தியர் யாவருக்கும் செய்ததையும் நினைத்துக் கொள் அவர்களுக்குப் பயப்படாதிரு, நீ பார்த்துப் பயப்படுகிற எல்லா ஜாதிகளுக்கும் உன் தேவனாகிய கர்த்தர் அப்படியே செய்வார். அவர்களைப் பார்த்து பயப்பட வேண்டாம். உங்கள் தேவனாகிய கர்த்தர், உங்களுக்குள்ளே இருக்கிறார் என்று மோசே ஜனங்களைப் பெலப்படுத்தினதை வாசிக்கிறோம். நமக்கு எதிராக பார்வோனின் சேனை வந்தாலும், குதிரைகளும், இரதங்களும் வந்தாலும் பயப்படாமல் கர்த்தர் என்னோடு இருக்கிறார். எதிர்ப்புகளை, எதிரிகளை அவர் முறியடிப்பார் என்று தைரியமாக இருங்கள். பாலாக் என்ற ராஜா பிலேயாம் என்ற தீர்க்கதரிசியை அழைத்து எனக்காக இந்த இஸ்ரவேலை சபிக்க வேண்டும் என்றான். பிலேயாம் சபிக்க முயன்ற போது எண் 23:20,21-ல் இதோ, ஆசீர்வதிக்கக் கட்டளை பெற்றேன், அவர் ஆசீர்வதிக்கிறார், அதை நான் திருப்பக்கூடாது. அவர் யாக்கோபிலே அக்கிரமத்தைக் காண்கிறதும் இல்லை. இஸ்ரவேலிலே குற்றம் பார்க்கிறதும் இல்லை. அவர்களுடைய தேவனாகிய கர்த்தர் அவர்களோடே இருக்கிறார். ராஜாவின் ஜெயகெம்பீரம் அவர்களுக்குள்ளே இருக்கிறது. நம்முடைய பிள்ளைகள் தவறு செய்தால் நாம் எவ்வளவு கண்டிப்போம். ஆனால் அடுத்தவர் நம் பிள்ளை மீது கை வைக்க நாம் அனுமதிப்பதில்லை. நம் தேவன் இஸ்ரவேலாகிய நமக்குத் தகப்பன். அவர் நம்மை மன்னித்து, நமக்கு இரங்குகிறவர்.

> **“ நமக்கு எதிராக பார்வோனின் சேனை வந்தாலும், குதிரைகளும், இரதங்களும் வந்தாலும் பயப்படாமல் கர்த்தர் என்னோடு இருக்கிறார். எதிர்ப்புகளை, எதிரிகளை அவர் முறியடிப்பார் என்று தைரியமாக இருங்கள். ”**



www.jesuslives.in

நம்மிடம் உள்ள குறைகளை, அக்கிரமத்தை மன்னித்து, நம்மை நேசித்து, நம்மை ஆசீர்வதிக்கிறவர். நாம் மட்டும் நம் இருதயத்தை தாழ்த்தி, நம்மை ஆராய்ந்து, உமக்குப் பிரியமில்லாத ஒன்றும் எனக்கு வேண்டாம். உமக்குப் மறைவாக எங்கே போவேன்?, உம்முடைய சமூகத்தை விட்டு எங்கே ஓடுவேன்?. நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர். நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர் என்ற வார்த்தையின்படி நாம் எங்கு சென்று, என்ன செய்தாலும் அங்கே அவர் இருக்கிறார் என்ற பயத்தோடு வாழ அர்ப்பணிப்போம்.

## யேகோவா ஷம்மா சுற்றிலும் இருக்கிறார்

நாம் எங்கு வாழ்ந்தாலும், என்ன செய்தாலும் நம்மை சுற்றிலும் இருக்கிறவர் நம் தேவனாகிய கர்த்தர் இயேசு. சங் 125:2-ல் பர்வதங்கள் எருசலேமைச் சுற்றிலும் இருக்குமாப்போல், கர்த்தர் இதுமுதல் என்றென்றைக்கும் தம்முடைய ஜனத்தைச் சுற்றிலும் இருக்கிறார் என்று சங்கீதக்காரன் சொல்கிறார். எசே 48:31-35 வரை வாசித்தால் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களுக்கு வாசல் நகரத்தில் இருக்கிறது. அதைச் சுற்றிலும் அளவு பதினெண்ணாயிரம் கோலாகும் அந்நாள் முதல் நகரம் யேகோவா ஷம்மா என்று பெயர் பெறும். கர்த்தர் நம்மைச் சுற்றிலும், சூழ்ந்து நம் கூடவே இருக்கிறவர் என்று வாசிக்கிறோம். ஆயிரம் வருட அரசாட்சியில் எருசலேமுக்கு கொடுக்கப்படுகிற பெயர். தமிழ் வேதாகமத்தில் யேகோவா ஷம்மா என்றால் கர்த்தர் அங்கே இருக்கிறார் என்று கொடுக்கப்பட்டுள்ளது. பர்வதங்கள் எருசலேமைச் சுற்றிலும் இருக்கிறது போல கர்த்தர் நம்மைச் சுற்றிலும் இருக்கிறார். சங் 46:5-ல் தேவன் அதின் நடுவில் இருக்கிறார், அது அசையாது, அதிகாலையில் தேவன் அதற்குச் சகாயம் பண்ணுவார். பூமி நிலைமாறினாலும், மலைகள் நடுசமூத்திரத்தில் சாய்ந்து போனாலும், ஜலங்கள் கொந்தளித்துப் பொங்கி, அதின் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தாலும் நாம் பயப்படோம். ஏனென்றால் தேவன் அதின் நடுவில் இருக்கிறார். தாவீது வாழ்க்கையைப் பாருங்கள் சங் 23:4-ல் நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன், தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர். எந்த பொல்லாப்பின் பாதையில் நான் நடந்தாலும் என் தேவன் என்னோடு இருக்கிறீர் என்றான். சங் 56:9-ல் நான் உம்மை நோக்கிக் கூப்பிடும் நாளில் என் சத்துருக்கள் பின்னிட்டுத் திரும்புவார்கள். தேவன் என் பட்சத்தில் இருக்கிறார் என்பதை அறிவேன் என்கிறான். சங் 118:6,7-ல் கர்த்தர் என் பட்சத்தில் இருக்கிறார், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்ன செய்வான்? எனக்கு அனுகூலம் பண்ணுகிறவர்கள் நடுவில் கர்த்தர் என் பட்சத்தில் இருக்கிறார். என் சத்துருக்களின் சரிகட்டுதலைக் காண்பேன். எத்தனை சத்துருக்கள் எதிராக வந்தாலும் தேவன் என் பட்சத்தில் இருக்கிறார் என்று அறிந்து விசுவாசிக்கும்படி சங்கீதக்காரனின் வாழ்க்கை இருந்தது. இன்று நாம் அப்படி விசுவாசித்துச் சொல்லுகிறோமா? தேவன் என் பட்சத்திலிருந்தால் எனக்கு விரோதமாய் இருப்பவன் யார்? அப் 2:25-ல் தாவீது, கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக நிறுத்தி நோக்கிக் கொண்டிருக்கிறேன், நான் அசைக்கப்படாதபடி, அவர் என் வலதுபாரிசத்திலே இருக்கிறார். என்றான். நாம் மாத்திரம் அல்ல மற்றவர்களும் தேவன் நம்மோடிருப்பதைக் காண்பார்கள். தாவீது கர்த்தர் தன்னோடு இருக்கிறார் என்று அவன் மாத்திரமல்ல, 1 சாமு 16:18-ல் அப்பொழுது சவுலின் வேலைக்காரரில் ஒருவன் பிரதியுத்தரமாக இதோ, பெத்லெகேமியனாகிய ஈசாயின் குமாரன் ஒருவனைக் கண்டிருக்கிறேன், அவன் பராக்கிரமசாலி, யுத்தவீரன், காரியசமர்த்தன், சவுந்தரியமுள்ளவன் கர்த்தர் அவனோடே கூட இருக்கிறார் என்றான். 1 சாமு 18:12-ல் கர்த்தர் தாவீதோடே கூட இருக்கிறார் என்று சவுல் கண்டான். 2சாமு 7:3-ல் அப்பொழுது நாத்தான் தீர்க்கதரிசி தாவீதை நோக்கி, நீர் போய் உம்முடைய இருதயத்தில் உள்ளபடியெல்லாம் செய்யும், கர்த்தர் உம்மோடு இருக்கிறாரே என்றான். யாக்கோபோடு தேவன் இருந்தார். ஆதி 31:5-ல் தன் மனைவிகளை அழைத்து உங்கள் தகப்பனுடைய முகம் நேற்று முந்தைய நாள் இருந்தது போல இருக்கவில்லை என்று எனக்குத் தோன்றுகிறது. ஆனாலும் என் தகப்பனுடைய தேவன் என்னோடேகூட இருக்கிறார் என்றான். யாக்கோபின் வாழ்வில், குடும்ப உறவில் ஏற்பட்ட துன்பத்தை மாற்றி அவனோடு இருந்து நன்மை செய்தார். ஆதி 28:15-ல் நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து இந்தத் தேசத்துக்கு உன்னைத் திரும்பி வரப்பண்ணுவேன்.

நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை என்றார். ஆண்டவர் யாக்கோபுக்கு கொடுத்த வாக்கை அப்படியே நிறைவேற்றினார். நான் உன்னோடு இருந்து, இந்த தேசத்துக்குத் திரும்பப் பண்ணுவேன் என்று சொல்லி அப்படியே நிறைவேற்றினார்.யோசேப்பின் வாழ்விலே கர்த்தர் இருந்தார். ஆதி 39:2,3-ல் கர்த்தர் யோசேப்போடே கூட இருந்தார். கர்த்தர் யோசேப்போடே இருக்கிறார் என்பதை அவன் எஜமான் போத்திபார் கண்டு, எல்லாப் பொறுப்பையும் அவனிடம் ஒப்படைத்தான். சங் 14:5-ல் அங்கே அவர்கள் மிகவும் பயந்தார்கள். தேவன் நீதிமானுடைய சந்ததியோடே இருக்கிறாரே என்ற வார்த்தையின்படி நம்முடைய முற்பிதாக்களோடே இருந்த தேவன் நம்மோடும் இருந்து எல்லா தீமைக்கும் விலக்கிக் நம்மைக் காப்பார்.

## பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடு இருக்கிறார்

இந்த வார்த்தையை கிதியோன் கேட்டபோது எந்த மகிழ்ச்சியும் அவனிடம் இல்லை. காரணம் பல இழப்புகள். தேசம் பாழாகி, குடும்பங்கள் சிதறி, வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு மீதியானியர் கைகளிலிருந்து கோதுமையைக் காப்பாற்ற ஆலைக்கு மறைவாக போரடித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது தேவனுடைய தூதனானவர் நியாய 6:12,13-ல் அவனுக்குத் தரிசனமாகி பராக்கிரமசாலியே, கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார். அப்பொழுது கிதியோன் அவரை நோக்கி, ஆ! என் ஆண்டவனே, கர்த்தர் எங்களோடே இருந்தால், இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன்?, கர்த்தர் எங்களை எகிப்திலிருந்து கொண்டுவந்தார் என்று எங்கள் பிதாக்கள் எங்களுக்கு விவரித்துச் சொன்ன அவருடைய அற்புதங்களெல்லாம் எங்கே?. எங்களை மீதியானியர் கையில் ஒப்புக் கொடுத்தாரே என்றான். 16-ஆம் வசனத்தில் அதற்குக் கர்த்தர் நான் உன்னோடே இருப்பேன், ஒரே மனுஷனை முறிய அடிப்பது போல நீ மீதியானியரை முறிய அடிப்பாய். இது தான் வாக்குதத்தம், கிதியோனுக்கு தேவன் பேசினார். அவன் பெரிய பராக்கிரமசாலி அல்ல, உண்மையில் பயப்படுகிறவன், அது ஆண்டவருக்கும் தெரியும். நியாய 7:10-ல் போகப்பயப்பட்டாயானால், அந்த சேனையிடம் நீயும், உன் வேலைக்காரனும் போய் என்ன பேசுகிறார்கள் என்பதை கவனி என்கிறதிலிருந்து ஆண்டவருக்கு இவன் பயப்படுகிறவன் என்று தெரியும் என்று அறியலாம். அப்படி பயப்பட்ட பலவீனமான அவனைக் கொண்டுதான் தேவன் இஸ்வேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சித்தார். இன்றைக்கும் நமக்கு பலவிதமான பலவீனங்கள் இருக்கலாம் ஆனால் நம்மோடு இருக்கிற கர்த்தர் பலவீனமானவரல்ல. அவர் நம்மோடு இருந்து நம்மை பலப்படுத்தி, தம்முடைய பெரிய இரட்சிப்பை செய்யப் போகிறார். அன்றைக்கு மீதியானியர் கையில் இஸ்ரவேலர் அகப்பட்டு, பாதிக்கப்பட்டது போல இன்றைக்கு நமது பூமியில் பலவிதமான சத்துருவின் பிடியில் அகப்பட்டு விடுதலை பெற முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிற, ஒவ்வொருவரையும் விடுவிக்க நம்மைத் தான் தேவன் அழைக்கிறார்.

> “நம்மோடு இருக்கிற கர்த்தர் பலவீனமானவரல்ல. அவர் நம்மோடு இருந்து நம்மை பலப்படுத்தி, தம்முடைய பெரிய இரட்சிப்பை செய்யப் போகிறார்.”

பராக்கிரமசாலியே! என்ற இடத்தில் உங்கள் பேரைப் போட்டு வாசித்துப் பாருங்கள். உன் குடும்பத்தை, பட்டணத்தை, தேசத்தை கிராமத்தை மீட்க கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்று சொல்லுங்கள். ஆகாய் 2:4-ல் பிரதான ஆசாரியரை ஆண்டவர் திடப்படுத்தினார். வேலையை நடத்துங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். நான் உன்னோடே இருக்கிறேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். ஆகாய் 1:13-லும் அதையே சொல்லுகிறார். ஏசாயா 61:1-4 வரை வாசிக்கும் போது கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார். சிறுமைப்பட்டவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார். அந்த அபிஷேகம் தான் நம்மைப் பெலப்படுத்தி, இருதயம் நொறுங்குண்டவர்களை, கட்டுண்டவர்களை, சிறைப்பட்டவர்களை, துயரப்பட்டவர்களை காப்பாற்றும். அதை நம்மைக் கொண்டு தேவன் செய்வார். அதற்காகத் தான் அவர் நம்மோடு இருக்கிறார். இந்த செய்தியை வாசிக்கிற ஒவ்வொருவரோடும் தேவனாகிய கர்த்தர் இயேசு கூடவே இருந்து நம்மை ஆசீர்வதிப்பாராக!.

# ISRAEL - BIBLE LAND TOUR 2023



சகோதரர் L.வின்சென்ட்ராஜ் அவர்களுடன்

## இஸ்ரேல்,ஜோர்டன் & எகிப்து

# மே 1 - 10

10-நாட்கள்

எங்களோடு வேதாகம தேசத்திற்கு வாருங்கள்



- தினமும் அதிகாலை பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னம் நிறைந்த ஆராதனை
- யோர்தான் நதிகரையில் ஆராதனை
- ஆண்டவர் இயேசு ஊழியம் செய்த இடங்கள்
- அவர் அற்புதம் செய்த பரிசுத்த ஸ்தலங்கள்
- கெத்செமனே தோட்டத்தில் ஜெப நேரங்கள்
- பத்து கற்பனைகளை பெற்ற சீனாய்மலை
- கலிலேயா கடலில் தேவனை துதித்தல்
- நைல் நதியில் படகு சவாரி

**9442800449**

தொடர்புக்கு — 9442800449, 9442800447, 9498000449.

உங்களுடைய பாஸ்போர்ட் நகலை அனுப்பி முன்பதிவு செய்து கொள்ளுங்கள்.
(சென்னையில் இருந்து புறப்பட்டு சென்னை வரும் வரை அனைத்து செலவுகளும் உட்பட)

**முன்பதிவு செய்ய கடைசி நாள்**
**Feb 28,2023**



# என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப் போவதில்லை

சகோதரி.பிரேமா டேவிட்

என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப் போவதில்லை, நான் இஸ்ரவேலின் நடுவில் இருக்கிறவரென்றும், நானே உங்கள் தேவனாகிய கர்த்தர், வேறொருவர் இல்லையென்றும் அறிந்து கொள்வீர்கள். என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப் போவதில்லை. யோவேல் 2:26,27. கிறிஸ்துவில் அன்பான வாலிபத்தம்பி, தங்கைகளே, அவமானத்தை எண்ணாமல் சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தில் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிற நம் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள். பத்தாம் வகுப்பில் 460-க்கு மேல் மார்க் எடுத்து, பன்னிரண்டாம் வகுப்பில் மார்க் குறைந்ததால் விரும்பியபடி என்ஜினியரிங்க்கு Apply கூட பண்ணமுடியாமல் ராஜாவின் பெற்றோர்கள் திகைத்து நின்றார்கள். ஏனென்றால் அப்பா வேலை பார்த்த மில்லும் சரியாக ஓடவில்லை. அவன் அக்கா branch post office -ல் master-ஆகத்தான் வேலை பார்த்தார்கள். அவன் அண்ணனும் என்ஜினியரிங் படித்ததால் அவனுக்கும் mess fess கட்டி இவனையும் படிக்க வைக்க முடியாது. பத்தாம் வகுப்பு மார்க் வைத்து இவனுக்கும் post office-ல வேலை வாங்கவேணடியது தான் என்று முடிவு பண்ணினார்கள். இரண்டு பிள்ளைகளை படிக்க வச்சிட்டு, மூன்றாவது பிள்ளையாகிய இவனை படிக்க வைக்கலனா பின்னாடி என்னைய மட்டும் படிக்க வைக்கலன்னு வேதனைப்படுவானே எப்படியாவது படிக்க வையுங்க என்று மற்றவர்கள் சொன்னாலும், அவனின் அம்மாவோ என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப் போவதில்லை-னு ராஜாவின் படிப்புக்காக தேவன் சொன்னாரே, அந்த வார்த்தையை அவர் நமக்கு நடத்திக் காண்பிக்கலையே என்று அங்கலாய்த்து அன்று 2004-ஆம் வருடம் மே மாதம் 3-வது சனிக்கிழமை சர்ச்சில் நடந்த உபவாச கூட்டத்தில் கலந்து கொண்டு ஆண்டவரே எங்களோடு பேசும் என்று காத்திருந்தார்கள். செய்தியின் நேரத்திலே பாஸ்டர் மூலம் ஆண்டவர் சொன்னார் இங்கு வந்திருக்கிற நிறைய பேர் நீங்க கேட்கிற கேள்விக்கு ஆண்டவரும் தனது கேள்வியின் மூலம் உங்களுக்குப் பதில் தருகிறார். எடுத்து வாசியுங்கள் மீகா 2:7 என்றார். யாக்கோபு வம்சம் என்று பேர் பெற்றவர்களே, கர்த்தரின் ஆவி குறுகியிருக்கிறதோ?, அவருடைய கிரியைகள் இவைகள் தானோ?, செம்மையாய் நடக்கிறவனுக்கு என் வார்த்தைகள் நன்மை செய்யாதோ?



www.jesuslives.in

இந்த வார்த்தையைக் கேட்டு அவன் அம்மா தன்னோடு தான் ஆண்டவர் பேசுகிறார் என்று அதை அப்படியே விசுவாசித்து, அவர் எங்களை வெட்கப்பட்டுப் போக விடமாட்டார் என்று நம்பிக்கையைப் பெற்று, விசுவாசத்தோடு என்ஜினியரிங் படிப்பிற்கு Apply பண்ணினார்கள். அதுவரை Branch post Master வேலை பார்த்த அவன் அக்காவுக்கு ஆச்சரியமாய் Postal Assistant வேலை உயர்வு கிடைத்தது. அவனுக்கு Fess கட்டுவதற்கான வழியை தேவன் உண்டாக்கினார். BE, MBA முடித்து இன்றைக்கு சொந்தமாக சென்னையில் ( NEET, JEE ) எல்லாப் படிப்பும் மற்றும் தேர்வுக்கான கோச்சிங் சென்டர் நடத்திக் கொண்டிருக்கிறான். படிக்க வைக்க முடியலையே என்ற வெட்கத்திலும், வேதனையிலும் இருந்த அவருடைய ஜனங்கள் வெட்கப்பட்டுப் போக விடவில்லை. அநேகர் படிப்பு, வேலையில் உயர்வு பெற கற்றுக் கொடுக்கும் ஒரு ஆசிரியராக, வழிகாட்டுபவராக உயர்த்தி, திருமண வாழ்க்கையில் ஏற்றதுணை, குழந்தையைத் தந்து ஆசீர்வதித்தார். நானே உங்கள் தேவன், நீங்கள் என் ஜனம் என்று அறிந்து கொள்ளச் செய்தார். கர்த்தர் யாக்கோபின் வம்சத்தைக் குறித்து, இனி யாக்கோபு வெட்கப்படுவதில்லை, இனி அவன் முகம் செத்துப் போவதில்லை என்றார்.

ஏசாயா 29:22. இதைவாசிக்கிற உங்கள் Life Story எல்லாம் இதே மாதிரி தானா? உங்கள் வெட்கத்திற்கு சில காரணம் இருக்கலாம், உங்களுடைய இளவயதின் தவறுகள், கவனக்குறைவு, பலவீனம், மற்றவர் செய்த தீமைகள், பெற்றோரின் இயலாமை, சாத்தானின் தந்திரங்கள் எதுவாயிருந்தாலும், உங்கள் பள்ளி, கல்லூரி, ஆபீஸ், கூடப்பிறந்தவர்கள், நண்பர்கள், உறவினர்கள் இன்னும் சபையில் எங்கே? எப்படிப்பட்ட சூழ்நிலையில நீங்க வெட்கத்தில் தலை குனிந்தீர்களோ, அதே இடத்தில உங்க தலையை உயர்த்தும்படி, நம் வெட்கத்தை, அவமானத்தை அவர் சிலுவையிலே சுமந்து தீர்த்ததினாலே இனி நீங்க வெட்கம் அடைவதில்லை. பயப்படாதே, நீ வெட்கப்படுவதில்லை ஏசாயா 54:4. உன் வெட்கத்திற்குப் பதிலாக இரண்டத்தனையான பலன் வரும் ஏசாயா 61:7. அவர்கள் வெட்கம் அனுபவித்த சகல தேசங்களிலும், அவர்களுக்கு புகழ்ச்சியும், கீர்த்தியும் உண்டாகச் செய்வேன். செப் 3:19 என்று நம் ஆண்டவர் இயேசு உங்களைப் பார்த்துச் சொல்லுகிறார். இந்த ஆண்டிலே, இனிவரும் நாட்களிலே நீங்கள் வெட்கப்பட்டுப் போவதில்லை. உங்கள் தேவன் என்று சொல்ல அவர் வெட்கப்படுவதே இல்லை எபி 11:16. ஆனால் நீங்கள் அவருடைய ஜனமாய் இருக்க வேண்டும் என அவர் எதிர்பார்க்கிறார். அவரின் ஜனமாயிருக்கிற நீங்கள், நாம் என்ன செய்ய வேண்டும்?.

> **நீங்கள் செய்த துணிகரமான, மறைவான பாவங்கள், முன்னோர்கள் செய்த பாவத்தினால் வந்த சாபங்கள், வியாதிகள்,பிரச்சனைகள் எல்லாவற்றிலிருந்தும் இயேசுவே உங்களை விடுதலையாக்குபவர்.**

## இயேசுவை விசுவாசிக்க வேண்டும்

(கர்த்தராகிய இயேசுவை) அவரை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் வெட்கப்படுவதில்லையென்று வேதம் சொல்லுகிறது. ரோமர் 10:11 இயேசு தான் இந்த உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்த்தவர். என் பாவத்திற்காக, (சாபம், வியாதி) நான் தண்டிக்கப்படுவதற்குப் பதிலாக, எனக்காக சிலுவையிலே மரித்து உயிரோடு எழுந்தவர். இயேசுவே நீர் எனக்கு வேண்டும், நீர் என் பாவங்களை மன்னித்து, உம் இரத்தத்தால் கழுவும், என்னை உம் பிள்ளையாய், உம் ஜனமாய் ஏற்றுக்கொள்ளும். நீரே என் ஆண்டவர், என் இரட்சகர் என்று தன் இருதயத்தில் நம்பி, விசுவாசித்து ஏற்றுக்கொண்டு வாயினாலே அறிக்கை பண்ணுகிறானோ, சொல்லுகிறானோ அவன் வெட்கப்படுவதில்லை. கர்த்தராகிய இயேசுவை நீ, உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று, உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்பு உண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும் ரோமர் 10:9,10. நீங்கள் செய்த துணிகரமான, மறைவான பாவங்கள், முன்னோர்கள் செய்த பாவத்தினால் வந்த சாபங்கள், வியாதிகள்,பிரச்சனைகள் எல்லாவற்றிலிருந்தும் இயேசுவே உங்களை விடுதலையாக்குபவர். உங்களை மன்னித்து வாழவைப்பவர் என்று விசுவாசத்தோடு வாயினாலே இப்பொழுதே சொல்லுங்கள். இயேசு உங்கள் பழைய

பாவக்கறைகளையெல்லாம், வெட்கத்தையெல்லாம் நீக்கி உங்கள் தலையை நிமிரச் செய்வார். இதோ, தெரிந்து கொள்ளப்பட்டதும், விலையேறப் பெற்றதுமாயிருக்கிற மூலைக்கல்லைச் சீயோனில் வைக்கிறேன். அதின் மேல் விசுவாசமாயிருக்கிறவன் வெட்கப்படுவதில்லை. ஆகையால் விசுவாசிக்கிற உங்களுக்கு விலையேறப் பெற்றது. 1 பேதுரு 2:5,6. நீங்கள் இயேசுவின் பிள்ளைகள் இனி சாத்தானோ, மனிதர்களோ உங்களைக் குற்றப்படுத்தவோ, வெட்கப்படுத்தவோ முடியாது. எனவே நீங்கள் சொல்லுங்கள் கர்த்தராகிய ஆண்டவர் எனக்குத் துணை செய்கிறார். என்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்?. நான் வெட்கப்படேன், வெட்கப்பட்டுப் போவதில்லையென்று அறிந்திருக்கிறேன் என்று அறிக்கையிடுங்கள். அவரை விசுவாசிக்கிற நீங்கள் வெட்கப்பட்டுப் போவதில்லை.

## கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும்

நான் உம்முடைய கற்பனைகளையெல்லாம் கண்ணோக்கும் போது, வெட்கப்பட்டுப் போவதில்லை சங் 119:6. இயேசுவை நம் தேவனாக எப்படி நீங்கள் விசுவாசித்து ஏற்றுக் கொண்டீர்களோ, அதைப் போல அவர் வார்த்தையையும் அப்படியே நம்பி விசுவாசித்து ஏற்றுக் கொண்டு கடைபிடிக்கும் போது நிச்சயமாய் நீங்கள் வெட்கப்பட்டுப் போவதில்லை. ஏனென்றால் வேத வாக்கியமெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. அவருடைய வார்த்தை ஆவியாயும், ஜீவனாயும் இருக்கிறது. (எபி 4:12, 2 தீமோத் 3:16, யோவான் 6:39) இயேசுவுக்கு ரூபமொன்றுமில்லை, இயேசுதான் வார்த்தை, வார்த்தை தான் இயேசு. அவர் சொல்லிய வார்த்தைகளை விசுவாசித்து நம்பிய ராஜாவும், குடும்பமும் வெட்கப்பட்டுப் போகவில்லை. நீங்கள் கஷ்டத்தில், தேவையில், படிப்பு, வேலை, திருமணம், குடும்பம் மற்றவரிடம் சொல்ல முடியாத எந்த காரியத்திற்காகவும் கர்த்தரிடத்தில் ஒரு வார்த்தையைக் கேளுங்கள். இந்த புதிய ஆண்டின் துவக்கத்திலிருந்து தினந்தோறும் 5 அதிகாரம் படித்தால் முழுவேதத்தையும் ஒரு வருடத்தில் படித்து விடலாம். அப்படி வாசிக்கும் போது உங்களோடு அவர் பேசுவார். ஊழியர்கள், ஆவிக்குரிய புத்தகங்கள் மூலமும் பேசுவார். அந்த வார்த்தையைப் பற்றிக் கொண்டு ஜெபத்திலே, அடிக்கடி மனதிலே கேட்டுக் கொண்டே இருங்கள். அடுத்ததாக ஆண்டவர் இப்படிச் சொல்லியிருக்கிறாரே அதனால நான் கீழ்ப்படிகிறேன். அதனால நான் மன்னிக்கனும், இப்படிச் செய்யக் கூடாது என்று அவர் வசனத்தின்படி நடக்கும் போது நீங்கள் அவருடைய பிள்ளை, ஜனம், அவர் உங்களோடு இருக்கிறார் என்பதை நிருபிப்பதற்காகவே இந்த ஆண்டிலே இந்த வாக்குத்தத்தத்தை உங்களுக்கு அனுப்பியிருக்கிறார், என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப் போவதில்லை என்று வாக்குக் கொடுத்த கர்த்தர் தாமே உங்களோடிருந்து ஆசீர்வதித்து வழிநடத்துவாராக.

> **இயேசுதான் வார்த்தை, வார்த்தை தான் இயேசு. அவர் சொல்லிய வார்த்தைகளை விசுவாசித்து நம்பிய ராஜாவும், குடும்பமும் வெட்கப்பட்டுப் போகவில்லை.**




சென்னை ஆசீர்வாத ஜெபம்
ஜனவரி
26
2023
இடம்
ஏலிம் மகிமையான
எழுப்புதல் தேவாலயம்
50, இரயில்வே
ஸ்டேஷன் ரோடு,
கோடம்பாக்கம்,
சென்னை – 24
நேரம்
காலை 9:30.மணி முதல் மதியம் 2:00 வரை
Pas. Osborne Jebadurai
Evg. L.Vincentraj


அன்றன்றுள்ள
அப்பம்
69TH
திருப்பத்தூர்
பரிசுத்த
உபவாச
முகாம்
FEBRUARY
3,4,5
2023
PRAYER CAMP
சகோ. மோகன் C. லாசரஸ், சகோ. G. P. S ராபின்சன்,
சகோ. C. எபிநேசர் பால், சகோ. L.வின்செண்ட்ராஜ், பாஸ்டர் ஆஸ்பார்ன் ஜெபத்துரை
வெள்ளி & சனி 5AM - 9PM
ஞாயிறு 5AM - 1PM
Contact :
94428 00449, 94428 00447



# புதிசு எல்லாம் புதிசு

Hello, குட்டீஸ் நல்லாயிருக்கீங்களா, ஹேப்பி நியூ இயர்!,

ஸ்காட்லாந்து தேசத்தில் பழமையான ஆலயம் ஒன்று இருந்தது. பார்ப்பதற்கு அழகாக, சூப்பராக இருந்தது. ஆனால் ஒரு சிலர் தான் இந்த ஆலயத்திற்கு வருவாங்க. பெஞ்சு மற்றும் தரையில் இருக்கும் துசியை துடைத்து. சுத்தம் செய்து பிரையர் நடத்திவிட்டு செல்வார்கள். ஆனால் உயரத்தில் மாட்டியிருந்த படத்தை எடுத்து யாரும் சுத்தம் செய்ததில்லை. அது என்ன படம் என்று கூட தெரியாத அளவிற்கு தூசியால் மூடியிருந்ததால், அந்த படத்தை எடுத்து சுத்தம் பண்ணுவது கடினமான வேலை என்று நினைத்து யாருமே அதைச் செய்யவில்லை. அந்த நேரத்தில் ஒரு குழுவினர் ஆலயத்திற்குச் சென்று, ஒரு வாரம் தங்கியிருந்து ஆலயம் முழுவதையும் சுத்தம் செய்ய தீர்மானித்தனர். மேலே இருந்த படத்தைப் பார்த்து, இந்த படத்தையெல்லாம் எடுத்து கீழே போட்டு விடலாம் என்று சொன்ன போது இன்னொருவர் அது என்ன படம் என்று பார்ப்போம் என்று சொல்லி, தூசியைத் தட்டி, தண்ணீரால் சுத்தம் செய்து, துணியை வைத்து துடைத்துவிட்டுப் பார்த்தால் அழகான படமாக காட்சியளித்தது. என்ன படம் என்று பார்க்கும் போது, இயேசப்பா கடைசியாக சீஷர்களுக்கு அப்பம் மற்றும் திராட்சரசம் கொடுத்த படம். இந்த படத்தை யார் வரைந்தது என்று பார்த்த போது உலக புகழ் பெற்ற மைக்கேல் ஏஞ்சலோ வரைந்த படம் என்று எல்லோரும் ஆச்சரியப்பட்டுப் போனார்கள். இது எவ்வளவு விலை உயர்ந்தது. இது 50 கோடிக்குக் கூட போகும். இது ரொம்ப முக்கியமானது என்று அதை ஆலயத்தில் மாட்டி வைத்தார்களாம்.



குட்டீஸ், நமக்குள்ளேயும், விலையுயர்ந்த அழியாத ஆத்துமா இருக்கிறது. பொய் சொல்லுவது, திருடுவது, கெட்ட வார்த்தை பேசுவது, கீழ்ப்படியாதது இதெல்லாம் தூசி மாதிரி நம் உள்ளத்தை, ஆத்துமாவைக் கறைபடுத்தி மறைத்து விடுகிறது. கறைபட்ட நம் உள்ளத்தை கழுவி புதுபிள்ளையாக, இயேசுவின் பிள்ளையாக மாற்றத்தான் இயேசப்பா நமக்காக இரத்தம் சிந்தி மரித்தார். அது மட்டுமல்ல நம்மை விசேஷித்தவர்களாக, விலையேறப் பெற்றவர்களாக மாற்றுகிறது. குட்டீஸ், நீங்களும் இயேசப்பாவுடைய பிள்ளையாக மாற ஆசையா? அப்ப இந்த ஜெபத்தைச் சொல்லுங்க

## ஜெபம்

அன்புள்ள இயேசப்பா நான் செய்த தப்பு எல்லாத்தையும் மன்னித்து, உங்க இரத்தத்தாலே என் பாவ அழுக்கை கழுவி, இந்த புது வருஷத்தில் புதுப்பிள்ளையாய், விலையேறப் பெற்ற பிள்ளையாய் மாற்றிவிடுங்க. நன்றி இயேசப்பா, இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

## மனப்பாட வசனம்

ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புதுச்சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின. 2 கொரி 5:17.



செம்பட்டியில்

# ஆசீர்வாத உபவாச ஜெபம்

ஜனவரி
வெள்ளிக்கிழமை
**13**
@10:00AM- 2:00PM

மாதம் தோறும் 2–வது வெள்ளிக்கிழமை

இடம்
வானத்தின் வாசல்,
எழுப்புதல் ஜெப மையம்,
செம்பட்டி, திண்டுக்கல்


Evg.L.Vincentraj  Evg.Kala Vincentraj

குறிப்பு கூட்டம் முடிந்த உடன் அனைவருக்கும் அன்பின் உணவு வழங்கப்படும்

ஜனவரி
**14**
சனிக்கிழமை
@10:00AM -2:00PM

மாதம் தோறும் 2–வது சனிக்கிழமை

# இயேசுவின் பாதத்தில்

உங்கள்
குடும்பத்திற்காக!, அற்புதத்திற்காக!, விடுதலைக்காக!, சுகத்திற்காக! மன்றாட்டு ஜெபம்

செம்பட்டி பேருந்து நிலையத்திலிருந்து 11.30AM மணி வரைக்கும் ஜெப மையத்திற்கு வாகன வசதி உண்டு

தொடர்புக்கு 94428 00449
94428 00447

# மரண இருளின் பள்ளத்தாக்கை மாற்றக்கூடிய தேவன்



கடந்த மாதம் என் சகோதரியின் மகள் ஒரு வயது குழந்தை, நுரையீரலில் சளி அதிகமாகி மூச்சுவிட சிரமப்பட்டால் மருத்துவமனையில் சேர்த்தோம். மருத்துவர்கள் தீவிர சிகிச்சை பிரிவில் வைத்து சிகிச்சை அளித்தார்கள். தொடர்ந்து காய்ச்சலும் இருந்து கொண்டே இருந்தது. இரத்தத்திலும் கிருமிகள் இருப்பதாக கூறினார்கள். தொடர்ந்து சிகிச்சை அளித்தும் எந்த முன்னேற்றமும் இல்லாததால் மருத்துவர்கள் 48 மணி நேரம் தான் என்று சொல்லிவிட்டார்கள். கர்த்தர் பிள்ளைக்கு சுகம் தர வேண்டும் என்று அவரிடம் மன்றாடினோம். அன்று இரவு கர்த்தாவே என்னை கைதூக்கி விடும் (399-வது எப்பி) நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்த போது நிகழ்ச்சியின் ஆரம்பம் முதல் முடிவு மட்டும் தேவன் என்னோடு பேசிக் கொண்டே இருந்தார். பாடல்கள் மூலம் என்னைத் தேற்றினார். ஜெப வேளையில் சகோதரி அவர்கள் வசனங்களை விளக்கி சொல்லி ஜெபிக்கும் போதும் ஆகாரைப் பற்றியும், எசேக்கியா ராஜாவின் வியாதி சுகமானதைப் பற்றியும் சொன்னார்கள் அவையெல்லாம் எங்களுக்காகவே அவர்கள் மூலம் தேவன் பேசினது போல இருந்தது. சகோதரர் அவர்களும் தேவ வார்த்தையை பிரசங்கித்த போதும், ஜெபித்த போதும் மரண கட்டுகள் உடையவும், ஒரு சோதமும் அனுகாமல் இருக்கவும், ஜீவன் உண்டாகவும் ஜெபித்தார்கள். அந்த நிகழ்ச்சி முழுவதும் தேவன் எங்களுக்காகவோ ஊழியர்களைக் கொண்டு பேசினார். எங்களைத் தோற்றினார். எங்களுக்குள் விசுவாசம் வந்தது. பிள்ளை சாவதில்லை, தேவன் அவளுக்கு சுகம் கொடுப்பார் என்றும், அவள் இந்த உலகத்தில் அவருக்கு சாட்சியாக வாழ்வாள் என்றும் விசுவாசித்தோம். அதன்படி தற்போது அவள் பரிபூரண சுகத்தோடு இருக்கிறாள். தேவாதி தேவனுக்கு நன்றி. கர்த்தாவே என்னை கைதூக்கி விடும் என்ற இந்த நிகழ்ச்சிக்காக நாங்கள் தேவனுக்கு அதிகமாக நன்றி சொல்கிறோம். எங்களைப் போன்று மரணப்பள்ளத்தாக்கில் இருக்கிற அநேகரை இந்த நிகழ்ச்சி மூலம் தேவன் தூக்கி எடுக்கிறதற்காகவும், சகோதரருக்காகவும், சகோதரிக்காகவும் தேவன் அவர்களை இந்த ஊழியத்தில் இன்னும் அதிகமாக பயன்படுத்த தேவனை துதிக்கிறோம்.

**சகோதரி. பியூலா — மதுரை.**

எனக்கு காலில் கட்டி போல் வந்தது. நாளடைவில் கால் வீக்கம் அதிகமாகி என்னை மருத்துவமனையில் சேர்த்தார்கள். அங்கும் நான் உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்தேன். எல்லாரும் நான் பிழைக்க மாட்டேன் என்று நினைத்து, என் பிணத்தை எப்பொழுது ஊருக்கு கொண்டு வருவார்கள் என்று என் ஊர் மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் நான் மருத்துவமனையில் இருந்தாலும் Youtube-ல் தேவனுடைய வார்த்தையைக் கேட்கும்படி என் மகன் வைத்து தருவாள் அதைக் கேட்டுக் கொண்டே இயேசுவிடம் எனக்கு சுகம் தாங்கப்பா, நான் உமக்கு சாட்சியாக வாழ வேண்டும் என்று ஜெபித்தேன். $3^{1/2}$ லட்சம் செலவு செய்து எனக்கு ஆப்ரேஷன் செய்தாலும், எனக்கு ஜீவன் தந்து, சுகம் கொடுத்தது என் இயேசப்பாதான். என் பிணம் எப்பொழுது வரும் என்று எதிர்பார்த்திருந்த மக்கள் மத்தியில் தேவன் என்னை ஜீவனோடு வாழ வைத்திருக்கிறார். இயேசு உயிருள்ள தெய்வம், ஜெபத்தைக் கேட்கிறவர். தலைநிமிர்ந்து வாழ வைக்கிறவர் அவருக்கே எல்லா மகிமையும் கனமும் உண்டாவதாக.

**சகோதரி. ராணி - திண்டுக்கல்.**

கடந்த வருடத்தில் கொரோனா பயத்தில் வீட்டில் இருந்த நாட்களில் எனக்கு திடீர் என்று மயக்கம் வந்ததால் பயந்து மருத்துவமனைக்கு சென்றேன் அப்பொழுது தேவனுடைய வார்த்தை எனக்கு கிடைத்தது. உனக்கு வரக்கூடிய பாடுகளைக் குறித்து நீ பயப்படாதே. 10 நாட்கள் நீ சிறையிருப்பாய். ஆனாலும் நீ அதிலிருந்து வெளியே வருவாய் என்று தேவன் சொன்னார். நான் இரட்சிக்கப்பட்ட நாளில் இருந்து தேவன் மேல் அதிக பிரியமாய் இருப்பேன். எனக்குள் தேவன் தைரியத்தை தந்தார். நான் அவரை விசுவாசித்தேன். 1 மாதம் கழித்து பரிசோதனைக்குச் சென்ற போது நன்றாகத் தான் சென்றேன். அங்கு போனபின் எனக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. 5 நாட்கள் மருத்துவமனையில் இருந்துவிட்டு வீட்டிற்கு வந்தவுடன் என் குடும்பத்தினர் இனி மேல் எந்த ஜெப கூட்டத்திற்கும் போகக் கூடாது. வயதாகிவிட்டது. பெலவீனமாக இருக்கிறீர்கள் என்று சொல்லி விட்டார்கள். எனக்கு வானத்தின் வாசல் உபவாச ஜெபத்திற்கு வர ரொம்ப ஆசை நான் தொடர்ந்து இயேசப்பா எனக்கு பெலன் தாங்க, என் வீட்டில் உள்ளவர்கள் என்னை தடை செய்யக் கூடாது என்று ஜெபித்தேன். தேவன் என்னை வானத்தின் வாசல் ஜெபத்திற்கு அழைத்து வந்ததற்காக அருக்கு கோடி ஸ்தோத்திரம்.

**சகோதரி. ஹெலன் - திண்டுக்கல்**

நான் மிகவும் பெலவீனப்பட்டு, தொடர்ந்து காய்ச்சலினாலும் கஷ்டப்பட்டேன். மருந்து மாத்திரைகள் எடுத்தும் காய்ச்சல் நிற்கவில்லை. மனம் உடைந்து போன நிலையில் செய்தியாவது பார்க்கலாம், கேட்கலாம் என்று நினைத்து பார்த்துக் கொண்டிருந்த போது தற்செயலாக நான் இயேசு வாழ்கிறார் ஊழியத்தின் மூலம் ஒளிபரப்பாகும் கர்த்தாவே என்னை கைதூக்கி விடும் என்ற நிகழ்சசியைப் பார்த்தேன். அதில் பாடப்பட்ட பாடல்கள் மூலம் தேவன் என்னோடு பேசினார் எனக்குள் விசுவாசம் வந்தது. நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே ஜெபித்தேன். இயேசப்பா இந்த நிகழ்ச்சியை நான் பார்த்து முடிப்பதற்குள்ளாக எனக்கு இந்த காய்ச்சலிலிருந்து சுகம் தாங்க என்று ஜெபித்தேன் தேவன் நல்லவர், அற்புதம் செய்பவர் அந்த நிகழ்ச்சி முடியும் போது எனக்கு காய்ச்சலிலிருந்து விடுதலை தந்தார். நான் சுகம் பெற்றேன். இயேசப்பாவுக்கு கோடான கோடி நன்றி. தொடர்ந்து கர்த்தாவே என்னை கைதூக்கி விடும் நிகழ்ச்சியைப் பார்க்கிறேன் மிகுந்த ஆசீர்வாதமாக இருக்கிறது.

**சகோதரி. ராஜரத்தினமேரி - பெங்களூர்**

கடந்த மாதத்தில் நான் கர்த்தாவே என்னை கைதூக்கி விடும் நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போது சகோதரி அவர்கள் சாட்சிகளை வாசித்தார்கள். நான் உடனே ஜெபித்தேன் இயேசப்பா என் உடம்பில் உள்ள கட்டி கறைந்து, மறைந்து போய் விட வேண்டும். இதைச் செய்ய உங்களால் முடியும் என்று விசுவாசிக்கிறேன். நானும் சாட்சி சொல்லுவேன் என்று ஜெபித்தேன். அதே போல தேவன் எனக்கு பரிபூரண சுகத்தைக் கொடுத்திருக்கிறார். தற்போது அந்த கட்டி இருந்த இடமே தெரியாமல் போய்விட்டது. எனக்கு சுகம் கொடுத்த தேவனுக்கு கோடான கோடி ஸ்தோத்திரம்.

**சகோதரி. ராணி**

கர்த்தாவே என்னை கைதூக்கி விடும் நிகழ்ச்சியின் மூலம் தேவன் என்னோடு, எனக்காகவே பேசினார். நான் தொழிலில் நஷ்டப்பட்டு மிகவும் மனம் உடைந்த நிலையில் இருந்தேன். என்னோடு சேர்ந்து வேலை செய்த பெண் என்னை ஏமாற்றிவிட்டு, பணத்தை எல்லாம் எடுத்துக் கொண்டு போய் விட்டாள். எனது மகனும் தொழிலை சரியாக கவனிக்கவில்லை. எல்லாவற்றையும் இழந்த நிலையில், ஏன்? உயிர் வாழ்கிறேன் என்ற சூழ்நிலையில் தான் நான் மிகவும் சோர்ந்து போய் இருந்தேன். தேவன் சகோதரர் மூலமாக பேசினார். உன்னை குழியிலிருந்து தூக்கி எடுப்பேன் என்று சொன்ன வார்த்தை எனக்கு மன தைரியத்தையும், தேவன் மேல் விசுவாசத்தையும் கொடுத்தது. இந்த நிலையிலிருந்து தேவன் என்னை தூக்கி எடுத்து சாட்சியாக வாழ வைப்பார் என்னோடு பேசி என்னைத் தேற்றின தேவாதி தேவனுக்கு ஸ்தோத்திரம்.

**சகோதரி. ராணி**



# இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு இணைந்து சுவிசேஷ ஒளியை பரவ செய்யுங்கள்

தேவன், தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது ஊழியத்தில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புகிறார்.அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவர் தமது பிள்ளைகளை பயன்படுத்துகிறார். நாம் வெறும் பார்வையாளராயிருப்பதை அவர் விரும்பாமல், அவரது ஊழியத்தின் பங்காளராக மாறுவதையே அவர் விரும்புகிறார்! நாம் கரையில் நிற்பதை விரும்பாமல் களத்தில் இறங்குவதையே அவர் விரும்புகிறார். அறிவிக்கப்படாத மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை கூறி, உலகை சுவிசேஷமயமாக்குகிற அந்த மகிமையான ஊழியத்தில் தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என அவர் விரும்புகிறார்!

விளையச் செய்கிறவர் தேவனாக இருந்தாலும், விதைக்கிற வேலையையும், நீர்ப்பாய்ச்சுகிற வேலையையும் அவர் நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார்(1கொரிந்தியர்3:7). இக்கடைசி காலத்தில், தமது சித்தத்தை நிறைவேற்றுகிற பணியில் ஈடுபடவேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

வாருங்கள்! இக்கடைசி கால எழுப்புதல் சுவிசேஷ பணியில் இணைந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தின் பங்காளர்களாக மாறுவோமாக!

## 1) BANK TRANSFER

| | |
|---|---|
| A/C NAME | : JESUS LIVES TRUST |
| BRANCH | : KOCHADAI MADURAI |
| BANK NAME | : UNION BANK OF INDIA |
| A/C.NO | : 493902010001022 |
| IFSC CODE | : UBIN0549398 |

| | |
|---|---|
| A/C NAME | : L.VINCENT RAJ |
| BRANCH | : MADURAI |
| BANK NAME | : AXIS BANK |
| A/C.NO | : 109010100247030 |
| IFSC CODE | : UTIB0001765 |

**2) இணையதளம்(WEBSITE)**

WWW.JESUSLIVES.IN

ஸ்கேன் செய்யுங்கள்

**3) காசோலை(CHEQUE)**

JESUS LIVES TRUST OR L.VINCENT RAJ

**4) GOOGLE PAY** : GPAY(GOOGLE PAY)TO , 944 300 9333 ,7598359316

**5) மணியார்டர்(E.M.O) :** இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் 54 ஏ.ஐ.பி.இ.ஏ நகர், ஏ - காலனி பரவை ,மதுரை - 625 402

நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கென்று வங்கிக் கணக்கு மூலமாகவோ, இணையதளம் மூலமாகவோ, அல்லது GOOGLE PAY மூலமாகவோ அனுப்பலாம். காணிக்கை அனுப்பியபின் அதைக் குறித்த விபரத்தை 944 28 00 449 என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு WHATSAPP மூலமாகவோ, accounts@jesuslives.in மூலமாகவோ எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

இயேசு வாழ்கிறார் மீடியா துறைக்கு

# வேலைக்கு ஆட்கள்

# தேவை

📍 இடம்
மதுரை
சென்னை
திண்டுக்கல்

## Available Positions :

#On Site

### MANAGER - MEDIA OPERATIONS

Should take care of the entire media operations with vast knowledge in media and digital media with latest technology implementation. Should be Expert in Team handling and the projects.

#Hybrid

### GRAPHIC DESIGNER

Should have vast knowedgle in Corel Draw,Adobe in design and illustrator. Should have the idea of print media and good work skill on digital platform desgin work as per the platforms

#Hybrid

### CONTENT WRITER

Should have a biblical knoweldge to write the content both in print media as well as in the Digital Platfoms. Excellent wrtining and communicating skill needed.

## Available Positions :

#On Site

### PROGRAM PRODUCER / DIRECTOR

Planning and creating new program as per the Inputs and need to have a vast knowledge in creating content from production to broadcasting . Knowelgde in Target Audience is a must.

#Hybrid

### VIDEO EDITOR

Should have vast knowedgle in Premire Pro, Davinci Resolve and FCP X. WIth creative Edit Skill using the lastest Desinging skill as per the broadcast Standard

#On Site

### SOUND ENGINEEER

Should have a work experience in Live sound Reinforcment and should handle the Aduio Studio in addtion the Live Broadcasting in realtime.

## Available Positions :

#Hybrid

### MOTION GRAPHICS DESIGNER

Should have vast knowedgle in After effects, Premiere pro and photoshop with good creative skill. Using the realtime graphics and virtual studio idea will be a plus.

#On Site

### CAMERAMAN

Should Operate the camera with lighting and audio knowledge.Ready to learn and implement the latest technology

#On Site

### PHOTOGRAPHER

Able to handle the DSLR and to work on the lightroom. Good Knowdelge with Creative Skill. Four Wheel Driving Experi-ence Needed.

Christian Candidates Having a Zeal to Work in a Christian Organisation can APPLY

**இப்பொழுது விண்ணப்பியுங்கள்**

https://jesuslives.in/careers/

OR

Email : connect@dprince.in

OR

Whatsapp : +91 7825 04 7825

OR

Whatsapp : +91 9498 00 0449

* Any UG/PG Candidates with respective Skill
* Bsc Visual Commuication or Any Media Studies or Experience in the respective Field.
* Experienced Staffs will be given Good Remuneration.
* Food And Accomodation will be provided.
* Male & Female can Apply.
* Fresher are welcomed whereas will undergo 3 months training without stipend.

# வாருங்கள் இணைந்து ஊழியம் செய்வோம்!

## உடன் ஊழியர்கள் தேவை!

காலி பணியிடங்கள்

| | |
|---|---|
| **ADMINISTRATIVE** OFFICER'S | 2 |
| **Manager** Ministry Operation's | 1 |
| **Office Assistant's** With Driving Skill | 2 |
| **Cook** To cook for 20 Members | 2 |
| **Volunteer** Prayer Warriors | 15 |

## இப்பொழுதே! விண்ணப்பியுங்கள்

Whatsapp
+91 7825 04 7825
+91 9498 00 0449


மதுரை மாவட்ட அனைத்து திருச்சபைகள் மற்றும்
இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் இணைந்து நடத்தும்
மதுரையில் எழுப்புதல்
உபவாச
ஜெபம்
ஜனவரி
21
சனிக்கிழமை
9:30am to 2:00pm
Prophet. Vincent Selvakumaar
Evg. KalaVincentraj
Evg. L.Vincentraj
இடம்
இயேசு அழைக்கிறார் ஜெபகோபுரம்,
பைபாஸ் ரோடு, பழங்காநத்தம்,
PRC Depot அருகில், மதுரை
உங்கள் யாவரையும்
அன்போடு அழைக்கின்றோம்
தொடர்புக்கு
94428 00449, 94428 00447

செம்பட்டியில்

# 2023
# புத்தாண்டு
# ஆசீர்வாதக் கூட்டம்



Evg.KalaVincentraj Evg.L.Vincentraj

ஜனவரி

**1**

ஞாயிற்றுக்கிழமை

மதியம் 3 மணி முதல்
மாலை 6 மணி வரை

## இடம்

வானத்தின் வாசல்,
எழுப்புதல் ஜெப மையம்,
செம்பட்டி, திண்டுக்கல்

தொடர்புக்கு
94428 00449
94428 00447